# திருப்பலி செபங்கள்
# இறை வார்த்தை வழிபாடு

## தொடக்கச் சடங்குகள்:

குரு : தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே...
எல் : ஆமென்.

குரு : நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக...
எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

## மன்னிப்பு வழிபாடு:

குரு : சகோதர சகோதரிகளே, தூய மறைநிகழ்வைக் கொண்டாட நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக்கொள்வோம்.

குரு : எல்லாம் வல்ல இறைவனிடமும்...
எல் : சகோதர சகோதரிகளே உங்களிடமும், நான் பாவி என ஏற்றுக் கொள்கிறேன். ஏனெனில், என் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும், பாவங்கள் பல செய்தேன்.

(மார்பில் தட்டிக் கொண்டு)

என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே! ஆகையால் எப்போதும் கன்னியான புனித மரியாவையும், வானதூதர், புனிதர் அனைவரையும், சகோதர சகோதரிகளே உங்களையும், நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக் கொள்ள மன்றாடுகிறேன்.

குரு : எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக!
எல் : ஆமென்.

குரு : ஆண்டவரே, இரக்கமாயிரும். ஆண்டவரே, இரக்கமாயிரும்.
குரு : கிறிஸ்துவே, இரக்கமாயிரும். கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.
குரு : ஆண்டவரே, இரக்கமாயிரும். ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**மாற்று மன்னிப்பு வழிபாடு:**

குரு : உள்ளம் நொறுங்கி வருந்துவோரைக் குணமாக்க அனுப்பப் பெற்ற ஆண்டவரே, இரக்கமாயிரும்...

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : பாவிகளைத் தேடி மீட்க வந்த கிறிஸ்துவே, இரக்கமாயிரும்...

எல் : கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

குரு : தந்தையின் வலப்பக்கம் வீற்றிருந்து எங்களுக்காக பரிந்து பேசுகின்ற ஆண்டவரே, இரக்கமாயிரும்...

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**வானவர் கீதம்:** (செபம்)

உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக!
உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக!
உம்மைப் புகழ்கின்றோம். உம்மை வாழ்த்துகின்றோம்.
உம்மை ஆராதிக்கின்றோம். உம்மை மகிமைப்படுத்துகின்றோம்.

உமது மேலான மாட்சியின் பொருட்டு, உமக்கு நன்றி கூறுகின்றோம்.
ஆண்டவராகிய இறைவா! வானுலக அரசரே!
எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா! ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே!
இயேசு கிறிஸ்துவே! ஆண்டவராகிய இறைவா!
இறைவனின் செம்மறியே! தந்தையின் திருமகனே!

உலகின் பாவங்களைப் போக்குபவரே! எங்கள் மேல் இரக்கமாயிரும்!
உலகின் பாவங்களைப் போக்குபவரே! எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்!
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே! எங்கள் மேல் இரக்கமாயிரும்!

ஏனெனில் இயேசு கிறிஸ்துவே! நீர் ஒருவரே தூயவர்!
நீர் ஒருவரே ஆண்டவர்! நீர் ஒருவரே உன்னதர்!
தூய ஆவியாரோடு தந்தையாகிய இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே.
ஆமென்!

**வானவர் கீதம்:** (பாடல்)
உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.
உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக.
புகழ்கின்றோம் யாம் உம்மையே, வாழ்த்துகின்றோம் இறைவனே.
உமக்கு ஆராதனை புரிந்து உம்மை மாட்சிப் படுத்துகின்றோம் யாம்.

உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
ஆண்டவராகிய இறைவனே இணையில்லாத விண்ணரசே.
ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும் வல்ல தந்தை இறைவனே.
ஒரே மகனாக உதித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறைவனே.
ஆண்டவராகிய இறைவனே இறைவனின் திருச் செம்மறியே.

தந்தையினின்று என்றென்றுமாக உதித்த இறைவன் மகனே நீர்.
உலகின் பாவம் போக்குபவரே நீர் எம் மீது இரங்குவீர்.
உலகின் பாவம் போக்குபவரே எங்கள் மன்றாட்டை ஏற்றருள்வீர்.
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, நீர் எம் மீது இரங்குவீர்.

ஏனெனில் இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர்!
நீர் ஒருவரே ஆண்டவர்! நீர் ஒருவரே உன்னதர்!
தூய ஆவியோடு தந்தை இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே.
ஆமென்.

**சபை மன்றாட்டு:**
குரு : செபிப்போமாக.

(நாளுக்குத் தகுந்த மன்றாட்மைச் சொல்லவும்)

உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் ஒரே இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

**முதல் வாசகம்:**

(பழைய ஏற்பாட்டின் இறை வார்த்தையின் முடிவில்...)

முத : ஆண்டவரின் அருள்வாக்கு!
எல் : இறைவனுக்கு நன்றி!

**பதிலுரைப் பாடல்:**

(திருப்பாடல்களிலிருந்து எடுக்கப்படும் பகுதியைப் பாடவும்)

**இரண்டாம் வாசகம்:**

(புதிய ஏற்பாட்டின் இறை வார்த்தையின் முடிவில்...)

முத : ஆண்டவரின் அருள்வாக்கு!
எல் : இறைவனுக்கு நன்றி!

**நற்செய்தி வாழ்த்தொலி:**

**நற்செய்தி வாசகம்:**

குரு : (மௌனமாக) எல்லாம் வல்ல இறைவா, உமது நற்செய்தியைத் தகுதியுடன் நான் அறிவிக்குமாறு என் இதயத்தையும் உதடுகளையும் தூய்மைப்படுத்தியருளும்.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்.
எல் : ஆண்டவரே, மாட்சி உமக்கே.

(அந்த நாளுக்குத் தகுந்தபடி நற்செய்தி வாசிக்கப்படும். அதன் முடிவில்...)

குரு : ஆண்டவரின் அருள்வாக்கு
எல் : கிறிஸ்துவே உமக்குப் புகழ்!

**மறையுரை:**

**நம்பிக்கை அறிக்கை:** (ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும்)
ஒரே கடவுளை நம்புகிறேன்.
விண்ணகமும் மண்ணகமும், காண்பவை காணாதவை,
யாவும் படைத்த எல்லாம் வல்ல தந்தை அவரே.
கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஒரே ஆண்டவர்
இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன்.
இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார்.
கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக,
உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர்.
இவர் உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர்.
தந்தையோடு ஒரே பொருளானவர்.
இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.
மனிதர் நமக்காகவும், நம் மீட்புக்காகவும் விண்ணகம் இருந்து இறங்கினார்.

(“மனிதர் ஆனார்” எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்)

தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடல் எடுத்து மனிதர் ஆனார்.

மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில்
சிலுவையில் அறையப்பட்டுப், பாடுபட்டு, இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.
மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
விண்ணகத்துக்கு எழுந்தருளி,
எல்லாம் வல்ல தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார்.
வாழ்வோரையும், இறந்தோரையும் தீர்ப்பிட,
மாட்சியுடன் மீண்டும் வர இருக்கின்றார்.
அவரது ஆட்சிக்கு முடிவு இராது.
தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் ஆண்டவரும்,
உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகிறேன்.
இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக
ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்.
இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.
ஒரே புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும் திரு அவையை நம்புகிறேன்.
பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக் கொள்கிறேன்.
இறந்தோரின் உயிர்ப்பையும், வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கிறேன். ஆமென்.

**நம்பிக்கை அறிக்கை:** (பாடல்)
விண்ணையும் மண்ணையும் படைத்தவராம் கடவுள் ஒருவர் இருக்கின்றார்.
தந்தை, மகன், தூய ஆவியராய் ஒன்றாய் வாழ்வாரை நம்புகிறேன்.

தூய ஆவியின் வல்லமையால் இறை மகன் நமக்காய் மனிதரானார்.
கன்னி மரியிடம் பிறந்தவராம் இயேசுவை உறுதியாய் நம்புகிறேன்.

பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார். சிலுவையில் இறந்து அடக்கப்பட்டார்.
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இறப்பின் மீதே வெற்றி கொண்டார்.

விண்ணகம் வாழும் தந்தையிடம் அரியணைக் கொண்டு இருக்கின்றார்.
உலகம் முடியும் காலத்திலே நடுவராய் திரும்பவும் வந்திடுவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். பாரினில் அவர் துணை வேண்டுகிறேன்.
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்றுப் பரிகார வாழ்வில் நிலைத்திடுவேன்.

திரு அவை உரைப்பதை நம்புகிறேன். புனிதர்கள் உறவை நம்புகிறேன்.
உடலின் உயிர்ப்பை நிலைவாழ்வை உறுதியுடனே நம்புகிறேன். ஆமென்.

**நம்பிக்கையாளர்கள் மன்றாட்டு:**
பதில் : எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. நமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் ஆகிய அனைவருக்காகவும் மன்றாடுவோம்.
2. நமது நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள், பொறுப்பில் உள்ள அனைவருக்காகவும் மன்றாடுவோம்.
3. நமது பங்கு மக்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், பெற்றோர்கள், பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.
4. குறிப்பிட்ட சில கருத்துகளுக்காக மன்றாடுவோம்.
5. மற்ற சிறப்புக் கருத்துகளுக்காக மன்றாடுவோம்.

# நற்கருணை வழிபாடு

**காணிக்கைப் பாடல்/பவனி:**

குரு : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுள்ளோம் நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்களுக்கு வாழ்வு அளிக்கும் அப்பமாக மாறும்.

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக.

குரு : (மௌனமாக) கிறிஸ்து நமது மனித இயல்பில் பங்கு கொள்ளத் திருவுளமானார். இத்தண்ணீர், இரசம் இவற்றின் மறைபொருள் வழியாக நாமும் அவருடைய இறை இயல்பில் பங்கு பெறுவோமாக.

குரு : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த இரசத்தைப் பெற்றுள்ளோம். திராட்சைச் செடியும் மனித உழைப்பின் பயனுமான இந்த இரசத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்கள் ஆன்மீகப் பானமாக மாறும்.

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக.

குரு : (தலை குனிந்து) ஆண்டவரே, தாழ்மையான மனமும் நொறுங்கிய உள்ளமும் கொண்ட எங்களை ஏற்றருளும். ஆண்டவரே இறைவா, நாங்கள் இன்று உமது திருமுன் ஒப்புக்கொடுக்கும் இப்பலி உமக்கு உகந்ததாவதாக.

குரு : (கைகளைக் கழுவும் போது) ஆண்டவரே குற்றம் நீங்க என்னைக் கழுவியருளும் பாவத்திலிருந்து என்னைத் தூய்மைப்படுத்தும்.

குரு : சகோதர சகோதரிகளே! என்னுடையதும் உங்களுடையதுமான இப்பலி எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுக்கு ஏற்றதாகும்படி மன்றாடுங்கள்.

எல் : ஆண்டவர் தமது பெயரின் புகழ்ச்சிக்காகவும், மாட்சிக்காகவும், நமது நன்மைக்காகவும், புனிதத் திரு அவை அனைத்தின் நலனுக்காகவும், உமது கையிலிருந்து இப்பலியை ஏற்றுக்கொள்வாராக.

**காணிக்கை மீது மன்றாட்டு:**

குரு : ஆண்டவரே, இரக்கத்துடன் எங்கள் பணியைக் கண்ணோக்கியருள உம்மை வேண்டுகின்றோம்: அதனால் நாங்கள் உமக்கு ஒப்புக் கொடுக்கும் இக்காணிக்கை உமக்கு ஏற்றதாகி எங்கள் அன்பை வளர்ப்பதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : இதயங்களை மேலே எழுப்புங்கள்.

எல் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.

குரு : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

எல் : அது தகுதியும் நீதியும் ஆனதே.

குரு : ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக, எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும். எங்கள் கடமையும் மீட்புக்கு உரிய செயலும் ஆகும். கிறிஸ்துவில் அனைத்தையும் புதுப்பிக்கவும், அவருடைய நிறைவில் நாங்கள் அனைவரும் பங்கு பெறவும் நீர் திருவுளமானீர். ஏனெனில் கடவுள் வடிவில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி, சிலுவையில் சிந்திய தமது இரத்தத்தால் யாவும் அமைதி பெறச் செய்தார். எனவே, அவர் அனைத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவருக்கும் நிலையான மீட்பின் காரணரானார். ஆகவே வானதூதர், முதன்மை வானதூதரோடும் அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோரோடும் வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து நாங்கள் உமது மாட்சியைப் புகழ்ந்து பாடி முடிவின்றிச் சொல்வதாவது...

தூயவர் தூயவர் தூயவர்! வான் படைகளின் கடவுளாம் ஆண்டவர்.
விண்ணகமும் மண்ணகமும் உமது மாட்சியால் நிறைந்துள்ளன.
உன்னதங்களிலே ஓசன்னா! உன்னதங்களிலே ஓசன்னா!
ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவரே.
உன்னதங்களிலே ஓசன்னா! உன்னதங்களிலே ஓசன்னா!

## நற்கருணை மன்றாட்டு 2

குரு : ஆண்டவரே, நீர் மெய்யாகவே தூயவர், தூய்மை அனைத்துக்கும் ஊற்று. ஆகவே உம்முடைய ஆவியைப் பொழிந்து, இக்காணிக்கைகளைத் தூய்மைப்படுத்த உம்மை வேண்டுகின்றோம். இவ்வாறு, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாக எங்களுக்கு இவை மாறுவனவாக.

அவர் பாடுபட உளம் கனிந்து தம்மைக் கையளித்த போது, அவர் அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, தம் சீடர்களுக்கு அளித்துக் கூறியதாவது:

**அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.**

அவ்வண்ணமே, இரவு விருந்தை அருந்தியபின், கிண்ணத்தையும் எடுத்து, மீண்டும் உமக்கு நன்றி கூறி, தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

**அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள். ஏனெனில் இது புதிய, நிலையான உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம். இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும். இதை என் நினைவாகச் செய்யுங்கள்.**

குரு : நம்பிக்கையின் மறைபொருள்!

**பதிலுரை 1:**

எல் : ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கை இடுகின்றோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

**பதிலுரை 2:**

எல் : ஆண்டவரே, நாங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் நீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம்.

**பதிலுரை 3:**

எல் : ஆண்டவரே, உலகின் மீட்பரே, எங்களை மீட்டருளும். உமது சிலுவையினாலும் உயிர்ப்பினாலும் எங்களை மீட்டவர் நீரே!

குரு : ஆகவே ஆண்டவரே, நாங்கள் கிறிஸ்துவின் இறப்பினையும் உயிர்ப்பினையும் நினைவு கூர்ந்து, வாழ்வு தரும் அப்பத்தையும் மீட்பு அளிக்கும் கிண்ணத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். உம் திருமுன் நின்று உமக்கு ஊழியம் புரியத் தகுந்தவர்கள் என எங்களை ஏற்றுக் கொண்டீர். எனவே உமக்கு நன்றி செலுத்துகின்றோம். மேலும் கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குகொள்ளும் எங்களைத் தூய ஆவியார் ஒன்று சேர்க்க வேண்டும் என உம்மை தாழ்மையுடன் மன்றாடுகின்றோம்.

குரு : ஆண்டவரே, உலகெங்கும் பரவி இருக்கும் உமது திரு அவையை நினைவு கூர்ந்தருளும். எங்கள் திருத்தந்தை (பெயர்), எங்கள் ஆயர் (பெயர்), எல்லாத் திருநிலையினர் ஆகிய அனைவரோடும் உமது திரு அவை அன்பில் நிறைவு பெறச் செய்தருளும்.

குரு : நீர் (இன்று) இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட (பெயர்) என்னும் உம் அடியாரை நினைவு கூர்ந்தருளும். உம் திருமகனோடு அவரது இறப்பில் இணைக்கப்பட்டிருந்த இவர் உயிர்ப்பிலும் அவரைப் போல இருக்கச் செய்தருளும்.

குரு : மேலும் உயிர்த்தெழும் எதிர்நோக்குடன் துயில் கொள்ளும் எங்கள் சகோதர சகோதரிகளையும், இறந்தோர் அனைவரையும் இரக்கத்துடன் நினைவு கூர்ந்து, உமது திருமுக ஒளியினுள் ஏற்றருளும். எங்கள் அனைவர் மீதும் இரக்கமாயிரும். கடவுளின் கன்னித் தாயான புனித மரியா, அவருடைய கணவரான புனித யோசேப்பு, புனிதத் திருத்தூதர்கள், இவ்வுலகில் உமக்கு உகந்தவராய் இருந்தோர் ஆகிய புனிதர் அனைவருடனும் நாங்கள் நிலைவாழ்வில் பங்குகொள்ளும் தகுதி பெற்று, உம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மைப் புகழ்ந்தேத்தும் வரம் அருள உம்மை மன்றாடுகின்றோம்.

# நற்கருணை மன்றாட்டு 3

குரு : ஆண்டவரே, நீர் மெய்யாகவே தூயவர், உம்முடைய படைப்புகள் எல்லாம் உம்மைப் புகழ்வது தகுமே. ஏனெனில் உம் திருமகனாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக தூய ஆவியாரின் செயலாற்றலால் அனைத்தையும் உய்வித்துத் தூய்மைப்படுத்துகின்றீர். கதிரவன் தோன்றி மறையும் வரை உமது பெயருக்குத் தூய காணிக்கையை ஒப்புக்கொடுக்குமாறு உமக்கென மக்களை இடையறாது ஒன்றுசேர்த்து வருகின்றீர்.

எனவே ஆண்டவரே, உமக்கு அர்ப்பணிக்க நாங்கள் கொண்டு வந்துள்ள இக்காணிக்கைகளை அதே ஆவியால் தூய்மைப்படுத்த உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகின்றோம். இவ்வாறு உம் திருமகனாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் இவை மாறுவனவாக. அவர் பணித்தவாறே இம்மறை நிகழ்வுகளைக் கொண்டாடுகின்றோம்.

ஏனெனில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், அவர் அப்பத்தை எடுத்து, உமக்கு நன்றி செலுத்தி, ஆசி வழங்கி, அதைப் பிட்டு, தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

**அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.**

அவ்வண்ணமே, இரவு விருந்தை அருந்தியபின், கிண்ணத்தையும் எடுத்து, உமக்கு நன்றி செலுத்தி, ஆசி வழங்கி, அதைத் தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

**அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள். ஏனெனில் இது புதிய, நிலையான உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம். இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும். இதை என் நினைவாகச் செய்யுங்கள்.**

குரு : நம்பிக்கையின் மறைபொருள்!

**பதிலுரை 1:**

எல் : ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கை இடுகின்றோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

**பதிலுரை 2:**

எல் : ஆண்டவரே, நாங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் நீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம்.

**பதிலுரை 3:**

எல் : ஆண்டவரே, உலகின் மீட்பரே, எங்களை மீட்டருளும். உமது சிலுவையினாலும் உயிர்ப்பினாலும் எங்களை மீட்டவர் நீரே!

குரு : ஆகவே ஆண்டவரே, உம் திருமகனின் மீட்பளிக்கும் பாடுகளையும் வியப்புக்கு உரிய உயிர்ப்பையும் விண்ணேற்றத்தையும் நாங்கள் நினைவு கூருகின்றோம். இவர் மீண்டும் வருவார் என எதிர்பார்த்திருக்கும் நாங்கள் இப்புனிதமான உயிருள்ள பலியை நன்றி செலுத்தி உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்.

உமது திரு அவையின் காணிக்கையைக் கண்ணோக்கியருள உம்மை மன்றாடுகின்றோம். இப்பலியினால் நீர் உளம் கனியத் திருவுளமானீர். இவ்வாறு உம்முடைய திருமகனின் திரு உடல், திரு இரத்தத்தால் ஊட்டம் பெறும் நாங்கள், அவருடைய தூய ஆவியால் நிரப்பப் பெற்று, கிறிஸ்துவுக்குள் ஒரே உடலும் ஒரே உள்ளமும் உடையவராக விளங்கச் செய்வீராக.

குரு : இவரே எங்களை உமக்கு என்றும் காணிக்கையாக்குவாராக. இவ்வாறு உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களோடு, முதன் முதலாக, புனிதமிக்க கன்னியும் கடவுளின் தாயுமான மரியா, அவருடைய கணவரான புனித யோசேப்பு, புனித திருத்தூதர்கள், மாட்சிமிகு மறைச்சாட்சியர், (இன்று நாங்கள் கொண்டாடும் புனித (பெயர்), எங்கள் பாதுகாவலராகிய புனித (பெயர்)), மற்ற புனிதர்கள் அனைவரோடும் நாங்கள் உரிமைப் பேற்றுக்குத் தகுதியுடையோர் ஆவோமாக. இவர்களின் வேண்டுதலால் நாங்கள் என்றும் உமது உதவியைப் பெறுவோம் என உறுதியோடு இருக்கின்றோம்.

குரு : ஆண்டவரே, எங்களை உம்மோடு ஒப்புரவாக்கும் இப்பலி உலகுக்கெல்லாம் அமைதியும் மீட்பும் தர வேண்டும் என மன்றாடுகின்றோம். இவ்வுலகில் பயணம் செய்யும் உமது திரு அவையை, சிறப்பாக உம் அடியாராகிய எங்கள் திருத்தந்தை (பெயர்) எங்கள் ஆயர் (பெயர்), ஏனைய ஆயர்கள், திருநிலையினர், உமக்கு சொந்தமான மக்கள் ஆகிய அனைவரையும் நம்பிக்கையிலும் அன்பிலும் உறுதி பெறச் செய்வீராக.

நீர் விரும்பியபடி உம் திருமுன் நிற்கின்ற இக்குடும்பத்தின் வேண்டல்களுக்குக் கனிவுடன் செவிசாய்த்தருளும். கனிவுள்ள தந்தையே, எங்கும் சிதறுண்டிருக்கும் உம்முடைய பிள்ளைகளைக் கனிவுடன் உம்மோடு சேர்த்துக்கொள்ளும்.

குரு : இறந்து போன எங்கள் சகோதரர் சகோதரிகளையும் உமக்கு உகந்தவர்களாய் வாழ்ந்து இவ்வுலகை விட்டுச் சென்ற அனைவரையும் உமது ஆட்சியில் கனிவுடன் ஏற்றருளும். நாங்களும் அங்கு வந்து சேர்ந்து, அவர்களோடு உமது மாட்சியால் என்றும் மன நிறைவு அடைவோம் என எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக எதிர்நோக்கியிருக்கின்றோம். இவர் வழியாகவே நீர் உலகுக்கு எல்லா நன்மைகளையும் வழங்குகின்றீர்.

### திருவிருந்துச் சடங்கு:

(அவர் திருக்கிண்ணத்தையும் திரு அப்பம் உள்ள தட்டையும் எடுத்து, இரண்டையும் உயர்த்திப் பிடித்துக்கொண்டு குரு சொல்கின்றார்)

குரு : இவர் வழியாக, இவரோடு, இவரில் எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் எல்லாப் புகழும் மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே.

எல் : ஆமென்! ஆமென்! ஆமென்!

குரு : மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறைப்படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்.

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக.
உமது ஆட்சி வருக.
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,
மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல,
எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

குரு : ஆண்டவரே, தீமை அனைத்திலிருந்தும் எங்களை விடுவித்து, எங்கள் வாழ்நாளில் அமைதியைக் கனிவுடன் அருள உம்மை மன்றாடுகின்றோம். உமது இரக்கத்தின் உதவியால் நாங்கள் பாவத்திலிருந்து எப்போதும் விடுதலை பெற்று, யாதொரு கலக்கமும் இன்றி நலமாய் இருப்போமாக. நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

குரு : ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, ‘அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன்’ என்று உம் திருத்தூதர்களுக்கு மொழிந்தீரே. எங்கள் பாவங்களைப் பாராமல், உமது திரு அவையின் நம்பிக்கையைக் கண்ணோக்கி, உமது திருவுளத்துக்கு ஏற்ப அதற்கு அமைதியையும் ஒற்றுமையையும் அளித்தருள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

எல் : ஆமென்.

குரு : ஆண்டவருடைய அமைதி உங்களோடு என்றும் இருப்பதாக.

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

குரு : ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்து கொள்வோம்.

**(செபம்):**

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே...
எங்களுக்கு அமைதியை அளித்தருளும்.

**(பாடல்)**

உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே!
எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே!
எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே!
எமக்கு அமைதி அருளும்.

குரு : ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, உயிருள்ள இறைவனின் திரு மகனே, தந்தையின் திருவுளப்படி, தூய ஆவியாரின் ஒத்துழைப்பால் உமது இறப்பின் வழியாக உலகுக்கு வாழ்வு அளித்தீர். இந்தப் புனிதமிக்க உம் உடலாலும் இரத்தத்தாலும் என்னுடைய எல்லாக் குற்றங்களிலிருந்தும் தீமை அனைத்திலிருந்தும் என்னை விடுவித்து, நான் என்றும் உம்முடைய கட்டளைகளில் கருத்தூன்றி நிற்கச் செய்தருளும். நான் ஒருபோதும் உம்மை விட்டுப் பிரிய விடாதேயும்.

குரு : ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, நான் உட்கொள்ளும் உம் திரு உடலும் திரு இரத்தமும் என்னை நீதித் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உள்ளாக்காமல், உமது பரிவிரக்கத்தால் என் மனதுக்கும் உடலுக்கும் பாதுகாப்பாகவும் நலம் அளிக்கும் அருமருந்தாகவும் இருப்பனவாக.

குரு : இதோ, இறைவனின் செம்மறி! இதோ, உலகின் பாவங்களைப் போக்குபவர்! செம்மறியின் விருந்துக்கு அழைக்கப் பெற்றோர் பேறுபெற்றோர்!

எல் : ஆண்டவரே! நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன், ஆனால், ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும் எனது ஆன்மா நலம் அடையும்.

குரு : கிறிஸ்துவின் திரு உடல் என்னைக் காத்து நிலைவாழ்வு அளிப்பதாக.
(அவர் கிறிஸ்துவின் திரு உடலை வணக்கத்துடன் உட்கொள்கின்றார்)

குரு : கிறிஸ்துவின் திருஇரத்தம் என்னைக் காத்து நிலைவாழ்வு அளிப்பதாக.
(அவர் கிறிஸ்துவின் திரு இரத்தத்தை வணக்கத்துடன் உட்கொள்கின்றார்)

குரு : கிறிஸ்துவின் திரு உடல்.
எல் : ஆமென்.

**திருவிருந்து பாடல்:**

கிறிஸ்துவின் ஆன்மாவே என்னைப் புனிதமாக்கும்.
கிறிஸ்துவின் திரு உடலே என்னை மீட்டருளும்.
கிறிஸ்துவின் திரு இரத்தமே என்னை எழுச்சியூட்டும்.
கிறிஸ்துவின் விலாவின் தண்ணீரே என்னைக் கழுவிடும்.
கிறிஸ்துவின் பாடுகளே என்னைத் தேற்றிடும்.
ஓ நல்ல இயேசுவே எனக்குச் செவிசாயும்.
உம் திருக்காயங்களுள் என்னை மறைத்தருளும்.
உம்மிடமிருந்து என்னைப் பிரிய விடாதேயும்.
தீயப் பகைவரிடம் இருந்து என்னைக் காத்தருளும்.
எனது இறப்பின் வேளையினில் என்னை அழைத்தருளும்.
உம்மிடம் வர எனக்குக் கட்டளையிட்டருளும்.
புனிதர்களோடு எக்காலமும் உம்மைப் புகழச் செய்யும். ஆமென்.

### திருவிருந்துக்குப் பின் மன்றாட்டு:

குரு : மன்றாடுவோமாக...

(அந்த நாளுக்கு ஏற்ற நன்றி செபத்தைச் சொல்லவும்)

ஆண்டவரே, நலம் அளிக்கும் உமது செயல் எங்களைத் தீய நாட்டங்களிலிருந்து விடுவிக்க உம்மை வேண்டுகின்றோம்: இவை எங்களை நேரிய வழியில் நடத்திச் செல்லக் கனிவுடன் அருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

### வாழ்த்தும் ஆசீரும்:

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.
குரு : எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவியார் உங்களுக்கு ஆசி வழங்குவாராக!
எல் : ஆமென்.
குரு : சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று.
எல் : இறைவனுக்கு நன்றி!

### இறுதிப் பாடல்:

**********